## அனுபவம் பேசுகிறது...

**(ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயத்திற்கு வந்து வழிபட்டு, அதன் பின் நீங்களும் உங்கள் அனுபவத்தை இப்பகுதியில் பதிவு செய்யலாம்)**

திருவான்மியூர் என்ற க்ஷேத்திர பூமியில் திருவருள் கொண்ட குரு சித்தர்கள் நாம் கசிந்து உருகினால் உடனுக்குடன் ஒலியாகவும் ஒளியாக்வும் காட்சி தருகிறார்கள். கலிகாலத்தில் சித்ததர்கள் என்று தெரியாது புதையல் போல பூமியில் இருந்துகொண்டே காட்சி தருகிறார்கள். அதில் குரு ஸ்ரீ சக்கரை அம்மா ஜீவ ஒளி தாங்கி காய வழியில் சிலருக்குக் காட்சி தருகிறார்கள்.

சென்னையைச் சேர்ந்த திருவாசி நாராயண ராவ் சுபா என்ற அன்பர் எம்மை குருஸ்ரீ சக்கரை அம்மா என்ற குரு பீடம் வாருங்கள் குரு தரிசனம் கிட்டும் என்றதால் அவருடன் யாமும் சென்றோம். நுழைவாயிலிலேயே நல்ல வாசனை கலந்த காற்று  வந்தது., பின் குரு பீட தரிசனத்தில் ஒரு மலர் குருவின் சிரசின் மேலிருந்து விழுந்ததில் எங்களுக்குப் பேரானந்தம்.

**–சித்தர் ஸ்ரீ அய்யா பிள்ளை, ராதாமங்கலம், நாகை மாவட்டம்.**

---

நானும் என் கணவரும் எங்கள் குரு தவத்திரு அய்யா பிள்ளை அறிவுரைக்கு இணங்க முதல் தடவையாக ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயத்திற்குச் சென்றோம். நான் அன்னையிடம் என் கவலைகளைக் கண்மூடிப் பேசிக்கொண் டிருக்கையில் என் கைமுட்டியில் ஏதோ ஓர் இளம் வயது ஒடிசலான உடம்புடைய பெண்ணின் கைமுட்டி பட்டதுபோல் தோன்றியது. என் கணவர் என் முன் அமர்ந்திருந்தார். ஒருவேளை அவரது கைகூட அவர் விபூதியை எடுக்கும்போது என்மீது பட்டிருக்கலாம்.என்று நினைத்தேன். பிரார்த்தனை முடிந்தபின், அவரிடம் நீங்கள் என்மேல் பட்டுக்கொண்டு விபூதி அல்லது வேறு ஏதாவது எடுத்தீர்களா என்று கேட்டேன். நான் கண்களைத் திறந்துகொண்டு உன் வேண்டுதலைத்தான் பார்த்துக்கொண்டிருந்தேன். தவிர நானோ, வேறு எவருமோ உன் மேல் படவேயில்லை என்றார். அந்த அறையில் எங்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்று எனக்குத் தெரியும்.. என் உடம்பில் உராய்ந்தவாறு கர்ப்பகிருகத்துள் சென்றது அம்மாதான் என்பதை உணர்ந்தேன். எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி தோன்றியது .

**–ஸ்ரீமதி சுஜாதா ராம், பம்மல், பல்லவரம், சென்னை.**

---

ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அம்மாவுக்குப் படைக்க நைவேத்தியம் செய்யுமாறு சொல்லப் பட்டபோது அதற்குச் சம்மதித்து நைவேத்தியம் செய்து வீட்டில் வைத்து விட்டு யாராவது எடுத்துச் செல்லுங்கள் என்று கூறிவிட்டு வெளியில் சென்று

விட்டேன். அன்றைய தினத்தில் யாரும் வந்து நைவேத்தியத்தை எடுத்துச் செல்லவில்லை. மனம் குமுறியது. மீண்டும் நிவேதனத்தைத் தயார் செய்து நானே எடுத்துச் சென்றேன். அப்போது அதுவரை நான் அனுபவித்திராத ஆனந்தத்தை அனுபவித்தேன். மனதில் ஆழ்ந்த அமைதியும் ஏற்பட்டது. இதன் மூலம் ஸ்ரீ அம்மா தன் பக்தர்கள் தாம் தயாரிக்கும் நிவேதனங்களைத் தாமே எடுத்து வந்து படைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது புலப்பட்டது..

**-ஸ்ரீமதி மீரா மனோஹர், பாலவாக்கம், சென்னை**

---

நான் ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயத்திற்குச் செல்லும்போதெல்லாம் என் அண்டைவீட்டில் இருந்த ஒரு பெண்மணியும் என்னுடன் வருவார். அவருடைய மகள் விவாக ரத்துப் பெற்று கையில் ஆறு வயதுப் பெண் குழந்தையுடனும் இருந்தார். அந்தத் தாய் தன்னுடைய அகலாத நம்பிக்கை யுடன் ஸ்ரீ சக்கரை அம்மாவின் கோயிலுக்கு வந்துகொண்டிருந்தார். என்ன ஆச்சரியம், வேறு ஒரு நல்ல வரன் தானே முன்வந்து, அந்தப் பெண்ணை மணந்துகொண்டு, அவள் பெண் குழந்தையையும் தன் குழந்தையாக பாவித்து அன்பு செலுத்தி வருகிறார். என் மகன் ராகவ் எஞ்ஜினியரிங் கல்லூரியிலும் என் மகள் லட்சுமி பல்வித சோதனைகளைக் கடந்து எம்.பி.ஏ யிலும் சேர முடிநததும் ஸ்ரீ அம்மாவின் அருளாலும் பரிவாலும்தான் என்பதை உறுதியாக உணர்ந்து மகிழ்கிறேன்.

**ஸ்ரீமதி சுபாஷிணி நாராயண ராவ், தி. நகர், சென்னை-17**

---

தினமும் மாலை வேளையில் ஸ்ரீ அம்மாவின் கோயிலுக்குத் தவறாமல் வந்துகொண்டிருந்தேன். பல மாதங்கள் கடந்த நிலையில் திருமதி **சுமனா சுரேஷ்** அவர்களின் முழு அனுமதியுடன் இதுநாள்வரை ஏதோ என்னால் முடிந்த சன்னதி காரியங்களை மிகவும் மகிழ்ச்சியோடும் ஈடுபாட்டுடனும் செய்து வருகிறேன். அது வேண்டும், இது வேண்டும் என்று நான் எதுவும் கேட்காத நிலையிலும் அம்மா எனக்கு எது நல்லது எனத் தேர்ந்து கற்பக விருட்சம், காமதேனு மாதிரி பல நன்மைகளை அளித்துள்ளார்கள். ஸ்ரீ அம்மாவுக்குத் தன் பக்தர்கள் மீது உள்ள பரிவு இத்தகையது.

**-ஸ்ரீ ஏ.என். பாலகிருஷ்ணன், திருவான்மியூர், சென்னை-41**

---

ஒருசமயம் வீட்டில் என் கணவர் சுமார் 20,000 ரூபாயை வைத்த இடம் தெரியாமல் இரண்டு நாட்கள் ரொம்பவும் சஞ்சலத்துடன் இருந்தார். நான் குருதேவ ஸ்ரீ சக்கரை அம்மாவிடம் மானசிகமாக தொலைந்த பொருள் கிடைக்குமாறு வேண்டிக்கொண்டேன். அரை மணி நேரம் கழித்து என் கணவர் ஏதோ பொறி தட்டியதுபோல் கீழே போய் காரைத் திறந்து வண்டி முழுவதும் தேடியதில் கார் சீட்டுக்கு அடியில் தொல்லைந்தது என்று நினைத்த தொகை

பத்திரமாக இருந்தது. கைமேல் பலன் உடனே கிட்டும்படிச் செய்வது நம் அம்மாவின் கருணைதான். ஒருமுறை என் நான்கு வயதுப் பேரனை ஒரு சாயங்கால நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றோம். அந்தப் பெரிய ஹாலின் பிரகாசமான விளக்கொளியில் குழந்தையின் கைகளில் தழும்பு போன்று ஏதோ சருமத்தில் இருப்பது தெரிந்தது. நிகழ்ச்சி முடிந்து திரும்பும்போதும் அது இருந்தது. அது ஏதேனும் மோசமான சரும வியாதியாக இருக்குமோ என்று எனக்குக் கவலையாகிவிட்டது. மறு நாள் காலை சரும வியாதிகள் சம்பந்த மான வைத்திய நிபுணரிடம் அழைத்துச் சென்று காண்பிக்கலாம், கவலைப் படும்படியாக எதுவும் இருக்காது என்று கணவர் ஆறுதல் கூறினார் . இருந்தாலும் நான் இரவு முழுவதும் ஸ்ரீ சக்கரை அம்மாவிடம் குழந்தைக்கு எந்த வியாதியும் இருக்கக்கூடாதே என்று மனமுருக வேண்டிக்கோண்டே இருந்தேன் .மறு நாள் காலையில் என் கணவர் குழந்தையின் கைகளில் களிம்பு ஏதாவது தடவலாம் என்று பார்த்தபோது, என்ன ஆச்சரியம், கைகளில் தழும்பு ஏதும் இருந்த தடையமே இல்லை!

**-பெயர் தெரிவிக்க விரும்பாத பக்தர், திருவான்மியூர், சென்னை-41**

---

கம்ப்யூட்டர் எஞ்ஜினீரான என் மகள் அமெரிக்காவில் பணியாற்றி வருகிறாள். திருமணமாகிப் பத்து ஆண்டுகளாகியும் அவளுக்குக் குழந்தை பாக்கியம் கிட்ட வில்லை. அவளுக்கு உடல் ஆரோக்கிய ரீதியாக வேறு பிரச்சினைகளும். இருந்ததால் முதலில் எங்களுக்கு அவளின் குழந்தையின்மை பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் போகப்போக அவளுக்கும் அவள் கணவருக்கும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வீடுகளில் எல்லாம் குழந்தைகள் இருக்கையில் நம் வீட்டில் மட்டும் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் அதிகரித்துவிட்டது இருவரும் எவ்வளவோ பரிசோதனைகள்.செய்தும் மருந்துகள் உட்கொண்டும் ஒரு பயனும் இல்லை. ஒருநாள் மாலை ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயத்தில் நானும் என் கணவரும் இது குறித்து மனம் உருக அம்மாவிடம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தபோது, சொல்லி வைத்தாற்போல், எங்கள் அருகில் நின்றிருந்த கோயில் நிர்வாகி ஸ்ரீமதி **சுமனா சுரேஷ்** (அம்மாவின் சீடரும், கோயிலை நிர்மாணித்தவருமான **டாக்டர் எம்.ஸி.நஞ்சுண்ட ராவ்** அவர்களின் பேத்தி) யாரிடமோ 'அம்மாவின் அருளால்தான் நானே பிறந்தேனாம், எனவே குழந்தை வரம் கேட்டு அம்மாவிடம் பிரார்த்தனை செய்தால் அது பலிக்காமல் இருப்பது இல்லை; அம்மாவின் அதிசயச் செயல்களுக்கு நானே ஓர் உயிர்த் துடிப்புள்ள சாட்சி' என்று சொல்லிக்கொண்டிருந்தது எங்கள் காதில் விழுந்து எங்களை மெய்சிலிர்க்கச் செய்தது. நாங்கள் மேலும் தீவிரமாக் எங்கள் வேண்டுதலை அம்மாவின் முன்வைத்தோம். ஓரிரு மாதங்களுக்குப்பின் அமெரிக்காவிலிருந்து போன் செய்த என் மகள், மகிழ்ச்சிபொங்க, தான் உண்டாகியிருப்பதாகத் தெரிவித்தாள். அது கேட்டு நாங்களும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம்.

மௌனமாக இறைவனுக்கும் ஸ்ரீ அம்மாவுக்கும் நன்றி சொன்னோம் இன்று எங்கள் மகள் ஒரு வயது நிரம்பிய ஆண் குழநதையின் பெருமிதம் மிக்க தாய்.

**-ஸ்ரீமதி பி. சுப்ரமணியன், பெசண்ட்நகர், சென்னை-90**

---

உறவினர் வீட்டுத் திருமணத்தில் கலந்து கொள்ள என் குடும்பத்தாருடன் நான் ஸ்ரீரங்கம் சென்றபோது திருமண சம்பந்தமான ஒரு நிகழ்ச்சி வீட்டு மொட்டை மாடியில் நடந்தது. மாடிப்படிகள் மிகவும் குறுகலாக இருந்தன. ப்ளாஷ் வைத்து படம் எடுத்தபோது ஒரு தீப்பொறி கிள்ம்பி விரைவில் தீ விபத்து ஏற்பட்டு அனைவரும் விழுந்தடித்துத் தப்பி ஓடலானார்கள். அதனால் ஜன நெரிசல் ஏற்பட்டது. நான் மாடிப் படிகளில் தூக்கி எறியப்பட்டேன். பலரும் என்மீது ஏறி மிதித்துக் கொண்டு ஓடியதால் உடல் நசுங்கிய நான் என் மனதிற்குள்ளாகவே அம்மாவை நினைந்து முழுமையாகச் சரணடைந்தேன். நினைவிழந்த நான் கண் விழித்துப் பார்த்தபோது மருத்துவமனையில் இருப்பதை அறிந்தேன். தீக் காயங்களுக்காகவும் சிராய்ப்புகளுக்காகவும் ஒரு நாள் சிகிச்சை பெற்றுத் திரும்பினேன். சென்னைக்கு வந்தபின் ஆறு மாத காலம் மேலும் சிகிச்சை பெற்று நலமடைதேன். ஸ்ரீ அம்மாவின் அருளால் தான் அன்று நான் உயிர் பிழைத்தேன் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

**-ஸ்ரீ ஸி.வி.கே. ராவ், திருவான்மியூர், சென்னை-41**

---

.